செய்தி வெளியீடு எண் : 1813 நாள் : 15.10.2022

## செய்தி வெளியீடு

**பரந்தூர் பசுமைவெளி விமான நிலையத்திற்கு, நிலம் கையகப்படுத்தும் பணியில், விவசாயிகளின் ஆட்சேபனை குறித்து, சென்னை, தலைமைச் செயலகத்தில், இன்று (15.10.2022) மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு, மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு மற்றும்_மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் ஆகியோர் ஒரு குழுவாக இணைந்து விவசாயிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.**

---

மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள் தலைமையில், இன்று (15.10.2022), தலைமைச் செயலகத்தில், பரந்தூர் பசுமைவெளி விமான நிலையத்திற்கு நிலம் கையகப்படுத்தும் பணியில், விவசாயிகளின் ஆட்சேபணை குறித்து, மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு மற்றும் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் ஆகியோர் குழு விவசாயிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டத்தில் 7 வருவாய் கிராமங்கள், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் 6 வருவாய் கிராமங்கள் மொத்தம் 13 வருவாய் கிராமங்களில் **"பசுமைவெளி விமான நிலையம்"** அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

ஏகனாபுரம் கிராமத்தில் உள்ள விவசாயிகள் அவர்களுடைய நிலத்தினை கையகப்படுத்த ஆட்சேபணை தெரிவித்ததால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் ஆகியோர்களிடம் விவசாயிகளை நேரிடையாக சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தும்படி ஆணையிட்டார்கள். அதனை தொடர்ந்து இன்று தலைமைச் செயலகத்தில், ஏகனாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு.க.சரவணன்,

திரு.ப.இரவிச்சந்திரன், திரு.து.கதிரேசன். திரு.செ.கருணாகரன், திரு.ச.கணபதி, திரு.க.சுப்பிரமணியன், திரு.வெ.முனுசாமி, திரு. லோ.இளங்கோ ஆகிய விவசாயிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

ஏகனாபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் கருத்து தெரிவிக்கையில், ஏகனாபுரம் கிராமத்தில் சுமார் 2400 மக்கள் வசித்து வருகிறார்கள். இவர்கள் அனைவருக்கும் விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. எங்கள் கிராமத்தின் வழியாக செல்லும் கம்பக்கால்வாய் விமான நிலையத்திற்காக கையகப்படுத்தக்கூடிய பகுதியில் உள்ளது. எங்கள் கிராமமே ஒரு சமத்துவபுரமாக உள்ளது. எங்கள் கிராமம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கான வழியினை தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒருவரும் பாதிக்கப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருப்பதாகவும், அதற்காகத்தான் வாழ்வாதாரத்திற்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கவும், சந்தை மதிப்பிற்கு 3.5 மடங்கு இழப்பீடு கொடுக்கவும் உத்தரவிட்டுள்ளார்கள் என தெரிவித்ததோடு, கிராம மக்களின் கோரிக்கையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இதனை தொடர்ந்து ஏகனாபுரம் கிராம மக்கள், 17.10.2022 அன்று அவர்களுடைய கோரிக்கையினை வலியுறுத்தி, மேற்கொள்ள இருந்த நடைபயணத்தை கைவிடுவதாக உறுதியளித்தனர்.

இந்த பேச்சுவார்த்தையில், தொழில்துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திரு.ச.கிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழக மேலாண்மை இயக்குநர், திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர், திருமதி மா.ஆர்த்தி இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், டாக்டர். சுதாகர், இ.கா.ப., காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலுவலர், திரு. ஜி.சிவருத்ரய்யா, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழக பொது மேலாளர், திருமதி புவனேஷ்வரி, ஆகியோர் பங்கு பெற்றனர்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in